நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026–ம் வருடம் மார்ச் திங்கள் 5–ம் நாள் வியாழக்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.243/2026
CNR.No.TNTS02–000768–2026
IN
குற்ற எண்.45/2026

கருப்பசாமி,
த/பெ.சண்முகையா … மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

1) காவல் உதவி ஆய்வாளர்,
சேர்ந்தமரம் காவல் நிலையம்.
2) சண்முகசாமி,
த/பெ.மாடசாமி … புகார்தாரர்கள்/எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது இன்று விசாரணைக்காக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.ஜெபா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும் வரப்பெற்ற இம்மனுவில் இரு தரப்பையும் கேட்டு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ….

**உத்தரவு**

1. **மனுவின் சுருக்கம்** –

மனுதாரர் வழக்கு சொத்தின் அபிடவிட்தார்/வாகன உரிமையாளர் என்றும், மேற்படி காவல் துறையினரால் U/s.12 of TNG Act and 318(4) BNS Act வழக்கு பதிவு செய்யப்பட்டு, மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி வழக்கு தன்மீது பொய்யாக பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றும், எனக்கும், மேற்படி வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றும், மேற்படி வழக்கில் தான் இந்நீதிமன்ற உத்தரவு படி பிணை உத்தரவு பெற்றுள்ளேன் என்றும், மேற்படி வழக்கில் தனக்கு சொந்தமான TN 79 M 3110 என்ற இருசக்கர வாகனம் காவல்துறையினரால் தனது வீட்டிலிருந்து எடுத்து செல்லப்பட்டு இந்த வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கிற்கும், தனக்கும் தனது வாகனத்திற்கு எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும், மேற்படி TN 79 M 3110 என்ற இருசக்கரவாகனத்தை 2ம் எதிர்மனுதாரிடமிருந்து கடந்த வருடத்திற்கு முன்பு தான்

கிரையமாக பெற்றுவிட்டேன் என்றும், மேற்படி TN 79 M 3110 வாகனத்தின் பெயர் மாற்றம் நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி வாகனத்தைப் பொறுத்தமட்டில் யாருக்கும் எந்தவித பாத்தியமோ, உரிமையோ கிடையாது என்றும், மேற்படி வாகனம் தனக்கு மட்டுமே பாத்தியப்பட்டதாகும் என்றும், வாகனத்தின் இன்ஜின் நம்பர். HALLE8R5A11989, Chassis No.MBLHAW224RSA93075 என்றும், மேற்படி வாகனம் 2024 வருட மாடல் என்றும், மேற்படி வாகனத்தை தனது சொந்த உபயோகத்திற்காக மட்டும் பயன்படுத்தி வந்தேன் என்றும், மேற்படி வாகனம் சேர்ந்தமரம் காவல்நிலைய வளாகத்தில் திறந்த வெளியில் நிறுத்திமிருப்பதாலும், மழையாலும், வெயிலிலும் இயற்கை சீற்றங்களாலும் பாதிக்கப்பட்டு சேதம் ஏற்பட்டு மேற்படி வாகனம் ஓடாத நிலையில் அதன் பாகங்கள் பழுதடைந்தும், என்ஜின் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புகள் மிகுதியாக உள்ளது என்றும், எனவே மேற்படி வாகனத்தை இந்நீதிமன்றத்திலிருந்து தன் பாதுகாப்பில் ஒப்படைக்க வேண்டியதாய் இருக்கிறது அல்லாத பட்சத்தில் தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் சம்பலிக்ககூடியதாயுள்ளது என்றும், மேற்படி வாகனத்தை இந்நீதிமன்றத்திலிருந்து தன் பாதுகாப்பில் ஒப்படைக்கும் பட்சத்தில் இந்நீதிமன்றம் இடும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க தயராக இருக்கிறேன் என்றும், மேற்படி வாகனத்தை தன்னிடம் கொடுக்கும்பட்சத்தில் மேற்படி வாகனத்தை விற்கவோ, அடமானம் வைக்கவோ, அல்லது உறுமாற்றங்கள் செய்யவோ மாட்டேன் என்றும், எனவே தனக்குப் பாத்தியப்பட்ட TN 79 M 3110 என்ற பதிவு எண் கொண்ட Splendor + இருசக்கர வாகனத்தை தற்காலிகமாக தன்னிடம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. அரசு தரப்பு பதிலின் சுருக்கம்</u> –**

அரசு தரப்பில், மனுதாரர் இவ்வழக்கின் எதிரி என்றும், இவ்வழக்கின் வாகனத்தை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு பி.ஆர்.எண்.101/2026 பெறப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் வாகனத்தை இந்த எதிரியிடம் வழங்கினால் இவ்வழக்கின் சொத்தான TN 79 M 3110 என்ற பதிவு எண் கொண்ட Splendor + இருசக்கர வாகனத்தை உறுமாற்றம் செய்யவும் விற்றுவிடவும் வாய்ப்பு உள்ளதால், எனவே, மேற்படி வாகனத்தை எதிரியிடம் வழங்க கடும் ஆட்சேபனை

தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>3. தீர்வு</u> –

வழக்கு ஆவணங்களைப் பரிசீலிக்கும் போது, மனுதாரர் இவ்வழக்கின் 1வது எதிரி ஆவார். இந்த வழக்கானது u/s. 12 of TNG Act, 318(4) BNS–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசு தரப்பில் கைப்பற்றப்பட்ட சொத்தான TN 79 M 3110 என்ற பதிவு எண் கொண்ட Splendor + இருசக்கர வாகனம் பி.ஆர்.எண்.101/2026 பிரகாரம் பெறப்பட்டு நிலைய பாதுகாப்பில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி வாகனத்தின் ஆர்சி புத்தகத்தின் நகலில் வாகனத்தின் உரிமையாளர் பெயர் சண்முகச்சாமி என்று உள்ள நிலையில், மேற்படி வாகனத்தின் உரிமையாளர் சண்முகச்சாமி என்பவர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தாக்கல் செய்த உறுதிமொழி ஆவணத்தில் தான் இந்த வழக்கில் 2ம் எதிர்மனுதாரர்/அபிடவிட்தார் என்றும், தான் தனக்கு சொந்தமான TN 79 M 3110 என்ற இருச்சக்கர வாகனத்தை கடந்த 2 மாதங்களுக்கு முன்பு தங்கள் ஊரை சேர்ந்த சண்முகையா மகன் கருப்பசாமி என்பவரிடம் விற்று விட்டேன் என்றும், மேற்படி TN 79 M 3110 என்ற இருச்சக்கர வாகனத்தை கருப்பசாமியிடம் ஒப்படைக்க தனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்று அபிடவிட் தாக்கல் செய்துள்ளதை கருத்தில் கொண்டும், மனுதாரர் தரப்பில் மேற்படி வாகனத்தின் ஆர்சி புத்தகத்தின் நகலை தாக்கல் செய்துள்ள நிலையிலும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும், மேலும் மேற்படி வாகனத்தை தொடர்ந்து இயக்காவிட்டால் அதன் உதிரி பாகங்கள் சேதமடைந்துவிடும் என்பது தெரிய வரும் நிலையிலும், தக்க ஜாமீன்தாரர் அடிப்படையில் மனுதாரரின் மேற்படி பொருளை மனுதாரரிடம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. எனவே, மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய ***Sunderbhai Ambalal Desai Vs. State of Gujarat*** உத்தரவின்படியும், மனுதாரர் வசம் அவர் மனுவில் கோரியுள்ள மேற்படி மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மேற்படி பி.ஆர்.எண்.101/2026–ல் தாக்கலான வழக்கு சொத்தான TN 79 M 3110 என்ற இருச்சக்கர வாகனத்தை மனுதாரருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இடைக்காலமாக திருப்பிக் கொடுக்க உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u> :–

1. மனுதாரர் ரூ.50,000/–க்கு தானும், தனி இரு நபரும் சொந்த பிணைப் பத்திரம் எழுதிதர வேண்டும்.
2. வழக்குச் சொத்தினை 4 கோணங்களில் புடைப்படம் எடுத்து, குறுந்தகடுடன் தாக்கல் செய்ய வேண்டும்.
3. நீதிமன்றம் வேண்டும் போதும், விசாரணையின் போதும் மேற்படி சொத்தினை ஆஜர்படுத்த வேண்டும்.
4. வழக்குச் சொத்தினை குற்ற செயலுக்கு உபயோகப்படுத்தக் கூடாது.
5. மேற்படி வழக்குச் சொத்தினை **Judicial form No.82 in order to Rule 257(1) of criminal rules of practice 2019** ன் படி பஞ்சநாமா தயார் செய்து இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026–ம் வருடம் மார்ச் திங்கள் 5–ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S MUTHU LAKSHMI

Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.05 16:01:16 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.